தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM



CALL:9894808044

| Vol: 02 | Issue: 243 | 4 Pages | 31.3.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 243 | 4 பக்கங்கள் | 31.3.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

# ஏ.டி.எம். சேவை கட்டண உயர்வு: இதுவா டிஜிட்டல் மயமாக்கம்..? முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்

சென்னை, மார்ச்.31

முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

அனைவரும் வங்கியில் கணக்கு தொடங்குங்கள் என்று மத்திய அரசு சொன்னது. பிறகு பணமதிப் பிழப்பு நடவடிக்கை கொண்டு வந்து, டிஜிட்டல் இந்தியா என்றார்கள்.

அடுத்து... டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்குக் கட்டணம் பிடித்தார்கள். குறைவான இருப்புத் தொகை என்று சொல்லி அபராதம் விதித்தார்கள். தற்போது, அனுமதிக்கப்பட்ட மாதாந்திர



அளவைத் தாண்டி ஏ.டி.எம்இல் பணம் எடுக்கும் ஒவ்வொருமுறையும் 23 ரூபாய் வரை கட்டணம் பிடிக்க வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ளது.

இதனால் என்ன ஆகும்..? தேவைக்கு மீறி, ஒரேயடியாக மக்கள் தங்கள் பணத்தை எடுக்க வேண்டி வரும். குறிப்பாக ஏழைகளுக்கும் வங்கிச் சேவைகள் சென்று சேரவேண்டும் என்ற நோக்கத்தையே இது சிதைத்துவிடும்.

ஏற்கனவே நிதி விடுவிக்கப்படாமல் தவிக்கும் நூறு நாள் வேலைத்திட்டப் பயனாளிகள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெறும் ஏழைகள் ஆகியோர்தான் இதனால் இருப்பதிலேயே அதிக பாதிப்புக்கு உள்ளாவார்கள்.

இது டிஜிட்டல்மயமாக்கம் அல்ல, இது நிறுவனமயமாக்கப்பட்ட சுரண்டல். ஏழைகள் ஏ.டி.எம். அட்டையைத் தேய்க்க, பணக்காரர்கள் திளைக்கிறார்கள்

இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு

விளக்கம்:
மயக்கம் நீங்கிக் குற்றம் அற்ற மெய்யுணர்வை உடையவர்க்கு, அம் மெய்யுணர்வு அறியாமையை நீக்கி இன்ப நிலையைக்கொடுக்கும்.

## ஏ.டி.எம். கட்டணம் உயர்வு: மல்லிகார்ஜுன கார்கே கடும் கண்டனம்




புதுடெல்லி, மார்ச்.31

வங்கிகளில் கணக்கு வைத்து இருப்பவர்கள் ஏ.டி.எம். மூலம் 5 முறைக்கு மேல் பணம் எடுத்தால், ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் ரூ.21 கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. தற்போது அந்த கட்டணம் ரூ.23 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கு காங்கிரஸ் கட்சி கடும் கண்டத்தை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தனது எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:

ஏ.டி.எம். கட்டண உயர்வு வேதனை தருகிறது. துரதிர்ஷ்டவசமாக நமது வங்கிகளை மக்களின் பணத்தை பறிக்கும் வசூல் முகவர்களாக மத்தியஅரசுஆக்கியுள்ளது.ஏற்கனவேமக்களின்சேமிப்புகணக்குகளில் குறைந்தபட்ச இருப்பை பராமரிக்கவில்லை என்று ரூ.43,500 கோடி மக்கள் பணத்தை மத்திய அரசு பறித்துள்ளது. இதுதவிர பிற சேவை கட்டணங்கள் என்ற பெயரிலும் மக்களின் பணம் எடுக்கப்படுகிறது. இதுதான் பா.ஜனதா அரசின் கொள்கை. இவ்வாறு அந்த பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியாவில் இருந்து மியான்மரை சென்றடைந்த 60 டன்கள் நிவாரண பொருட்கள்



புதுடெல்லி, மார்ச்.31

மியான்மர் நாட்டின் 2வது பெரிய நகரான மண்டாலே நகரருகே கடந்த 28ந்தேதி மதியம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டரில் 7.7 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்திற்கு பின்பும் தொடர்ந்து நிலநடுக்க அதிர்வுகள் ஏற்பட்டன.

இதனால், கட்டிடங்கள் பல அடியோடு சரிந்தன. வரலாற்று சிறப்பு மிக்க துறவிகளுக்கான மடாலயம் கூட இதனால் பாதிக்கப்பட்டது. 2 பாலங்கள் இடிந்து விழுந்தன. 5 நகரங்கள் கட்டிட இடிபாடுகளை சந்தித்துள்ளன. மியான்மரில் ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்திற்கு 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்து உள்ளனர்.

இதனை தொடர்ந்து மண்டாலே, சகாயிங், மாக்வே, வடகிழக்கு ஷான்மற்றும்பகோபகுதிகளில்அவசரகாலநிலையைஅரசுபிறப்பித்து உள்ளது. மீட்பு பணிகள்தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன. இந்நிலையில், மியான்மருக்கு நிவாரண பணிகளுக்காக ஐ.நா. அமைப்பு 50 லட்சம் அமெரிக்க டாலர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அமெரிக்கா, சீனாவும் உதவிக்கரம் நீட்ட முன்வந்துள்ளன.

எனினும், இந்திய அரசு உடனடியாக நிவாரண பொருட்களை மியான்மருக்கு அடுத்தடுத்து அனுப்பி உதவியை நீட்டித்து வருகிறது. இதன்படி, இந்தியாவில் இருந்து மியான்மர் நாட்டுக்கு 60 டன்கள் நிவாரண பொருட்களுடன் 2 சி17 விமானங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்திய ராணுவ மருத்துவமனை பிரிவின் 118 உறுப்பினர்களுடன் சென்ற அந்த விமானங்கள் இரண்டும் மியான்மரை சென்றடைந்தன. இந்த உதவிகளை பற்றி மத்திய வெளிவிவகார அமைச்சக செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்ட செய்தியில், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன்களுக்கான சேவையும் இதில் அடங்கும் என்றார்.

இதுதவிர, சி130 விமானம் ஒன்று மீதமுள்ள தேசிய பேரிடர் மீட்பு படையை சேர்ந்த 38 வீரர்கள் மற்றும் 10 டன்கள் நிவாரண பொருட்களுடன் நைபிடாவை சென்றடைந்தது. அதனுடன், 60 பாராசூட் ஆம்புலன்சுகளுடன்2சி17ரகவிமானங்களும்சென்றடையும் என அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பேரிடரில் சிக்கி தவிக்கும் காயமடைந்த நபர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க 60 படுக்கைகளுடன் கூடிய மருத்துவ சிகிச்சை மையமும்இந்தியராணுவம்சார்பில்ஏற்படுத்தப்படும். நெருக்கடியான தருணங்களில் தன்னை சுற்றியுள்ள மற்றும் அதற்கு அப்பாலுள்ள நாடுகளுக்கு விரைவாக உதவிகளைவழங்குவதில் இந்தியா தொடர்ந்து முன்னணி நாடாக உள்ளது.

## கோவிலுக்கு சென்றபோது கார் கவிழ்ந்து விபத்து 3 பேர் பலி

ஜெய்ப்பூர், மார்ச்.31

ராஜஸ்தானில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 10 பேர் காரில் கோவிலுக்கு சென்றுகொண்டிருந்தனர்.பீவர்மாவட்டத்தில்உள்ளநெடுஞ்சாலையில் கார் சென்றுகொண்டிருந்தபோது விலங்கு ஒன்று சாலையை கடக்க முயன்றதால் கார் டிரைவர் விலங்கின் மீது மோதுவதை தவிர்க்க வாகனத்தை திருப்பினார். இதில் எதிர்பாராதவிதமாக கார் கவிழ்ந்து பலமுறை உருண்டதாக கூறப்படுகிறது.

இந்த விபத்தில் புக்ராஜ் குமாவத் (42), அவரது மனைவி பூஜா (38) மற்றும் அவர்களது மகன் யஷ்மித் (6) ஆகியோர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

இது குறித்து தகவலறிந்த போலீசார் விபத்தில் சிக்கி படுகாயமடைந்த 7 பேரை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் விபத்தில் உயிரிழந்த 3 பேரின் உடலை மீட்ட போலீசார் பிரேத பரிசோதனைக்காக மருத்துவனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## உசிலம்பட்டி காவலர் அடித்துக்கொல்லப்பட்ட வழக்கு: தேடப்பட்ட நபர் என்கவுன்ட்டர்



தேனி மார்ச்.31

உசிலம்பட்டி காவல் ஆய்வாளரின் ஓட்டுநரான, கள்ளபட்டியைச் சேர்ந்த முதல் நிலை போலீஸ்காரரான முத்துக்குமார் (40), இவர் கடந்த 27ம் தேதி பணி முடிந்து முத்தையன்பட்டியில் உள்ள டாஸ்மாக் கடையில் மது அருந்தும் போது, அங்கே மது அருந்திக் கொண்டிருந்த கஞ்சா வியாபாரி பொன்வண்ணனுக்கு அறிவுரை செய்துள்ளார். இதனால் இருவர் இடையே தகராறு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. பின் அங்கிருந்து வெளியே வந்த முத்துக்குமார், கள்ளபட்டியைச் சேர்ந்த ராஜாராம் என்பவருடன் அருகில் உள்ள தோட்டத்திற்கு வந்துள்ளார்.

அப்போது அடையாளம் தெரியாத சிலர், பின்னால் வந்து முத்துகுமாரை கல்லால் தாக்கி உள்ளனர். இதனால் தலையில் பலத்த காயம் அடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவருடன் உடனிருந்த ராஜாராம் என்பவரும் இந்த தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில், அவருக்கு உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதையடுத்து காவலர் முத்துகுமாரை கல்லால் அடித்து கொலை செய்தது கஞ்சா வியாபாரி பொன்வண்ணன் என்பது போலீசார் விசாரணையில் தெரிய வந்தது. தொடர்ந்து கொலை வழக்கில் பொன்வண்ணனை பிடிக்க தனிப்படை அமைத்து போலீசார் தேடி வந்தனர். அப்போது அவர் தேனி மாவட்டம் கம்பம் வனப்பகுதியில் இருப்பதாக வந்த தகவலை அடுத்து அவரை கைது செய்ய போலீசார் அங்கு சென்றனர்.

அப்போது கைது செய்ய சென்ற போலீசாரை பொன்வண்ணன் தாக்கியதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக உசிலம்பட்டி நகர ஆய்வாளர் ஆனந்தன், பொன்வண்ணனை என்கவுன்ட்டர் செய்ததாக கூறப்படுகிறது.

## கோவை: மூதாட்டியை கொலை செய்த வாலிபருக்கு ஆயுள் தண்டனை நீதிபதி தீர்ப்பு



ஆவடி, மார்ச்.31

தமிழ்நாடு பேரிடர் மீட்பு துறையில் ரூ. 2 ஆயிரம் முதல் ரூ. 30 ஆயிரம் வரை G pay மூலம் பணம் பெற்றுக்கொண்டு போலீசாருக்கு விடுமுறை கொடுத்த பட்டாலியன் உதவி கமாண்டன்ட் சஸ்பெண்ட் செய்யப் பட்டார்.

ஆவடியில் உள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படை 13வது பட்டாலியன் பிரிவில் உதவி கமாண்டன்ட்டாக (உதவி தளவாய்) பணியாற்றி வந்தவர் முத்துகிரு ஷ்ணன் (57). கூடுவா ஞ்சேரி அடுத்த மாடம்பாக்கம் பகுதியை சேர்ந்தவரான இவர், பட்டாலியனில் விடுமுறை, மருத்துவ விடுப்பு, பர்மிஷன் கேட்டு வரும் போலீசாரிடம் பணம் பெற்றதாக பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தது. இதுகுறித்து ஆயுதப்படை போலீசார் தரப்பில் உயர் அதிகாரிகளுக்கு புகார்கள் சென்றது. அதன் அடிப்படையில் ஆயுதப்படை கூடுதல் டி.ஜி.பி.ஜெயராம், இதுகுறித்து விசாரணை செய்ய உத்தரவிட்டார். அதன்பேரில் விசாரணை நடத்திய அதிகாரிகள், முத்துகிருஷ்ணன் வங்கி கணக்குகளை ஆய்வு செய்தனர். அப்போது முத்துகிருஷ்ணன், போலீசாருக்கு விடுமுறை கொடுக்க அவர்களிடம் இருந்து ரூ.2 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரை பணம் பெற்று முறைகேடுகளில் ஈடுபட்டது உறுதியானது. இதையடுத்து அவர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக அரசுக்கு போலீஸ் தரப்பில் பரிந்துரை செய்யப்பட்டது.

இந்தநிலையில் உதவி கமாண்டன்ட் முத்துகிருஷ்ணனை பணியிடை நீக்கம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது. தற்போது முத்துகிருஷ்ணன், ஒரு மாதமாக விடுமுறையில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனிடையே முதல்அமைச்சர் தனிப்பிரிவில் போலீசார் அளித்த புகாரின் பேரில் காவல்துறை டிஐஜி இந்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோவை: மூதாட்டியை கொலை செய்த வாலிபருக்கு ஆயுள் தண்டனை நீதிபதி தீர்ப்பு

கோயம்புத்தூர் மார்ச்.31

கோவை மாவட்டம், தடாகம் பகுதியில் தனியாக வசித்த 70 வயது மூதாட்டியை கடந்த 2021ம் ஆண்டு ஆதாயத்திற்காக கொலை செய்த குற்றத்திற்காக சுப்பிரமணியன் மகன் கருப்பையா(எ)வினோத் (வயது 25) மீது தடாகம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, இவ்வழக்கின் விசாரணை கோவை மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இவ்வழக்கின் விசாரணை முடிவு பெற்று மகிளா நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு வழங்கினார். அதில் குற்றவாளி கருப்பையாவுக்கு ஆயுள் சிறை தண்டனை மற்றும் ரூ.1500 அபராதம் விதித்து அவர் உத்தரவிட்டார்.

இவ்வழக்கினைசிறந்த முறையில் புலன்விசாரணை செய்த அதிகாரி மற்றும் சாட்சிகளை நீதிமன்றத்தில் சிறந்த முறையில் ஆஜர்படுத்திய நீதிமன்ற காவலர் தமிழரசன் ஆகியோரை கோவை மாவட்ட எஸ்.பி. கார்த்திகேயன் பாராட்டினார்.

## மருத்துவ மாணவிக்கு பாலியல் தொல்லை: சென்னையில் அதிர்ச்சி சம்பவம்

சென்னை, மார்ச்.31

சென்னையில் பல் மருத்துவ கல்லூரியில் படித்து வரும் 26 வயது மாணவிக்கு தொடர் பாலியல் தொல்லை கொடுத்த விவகாரம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டநிலையில், பாலியல் தொல்லை கொடுத்த அதே கல்லூரியில் பயிலும் மாணவர் மீது 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி பாலியல் துன்புறுத்தல், பெண்ணை அவமதிக்கும் செயலில் ஈடுபடுதல், மிரட்டல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து போலீசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

முன்னதாக போலீசார் நடத்திய விசாரணையில் கல்லூரிக்குள்ளேயே பாலியல் தொல்லை கொடுத்தது அம்பலமாகி உள்ளது. புகார் குறித்த தகவல் அறிந்த மாணவர் தலைமறைவாகி விட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

## நெல்லை: யானைகளுக்கிடையே ஏற்பட்ட சண்டையில் ஒரு யானை உயிரிழப்பு



நெல்லை, மார்ச்.31

நெல்லைமாவட்டம்பாபநாசம்மேற்கு தொடர்ச்சி மலையில் முண்டந்துறை வனச்சரகத்துக்கு உட்பட்ட வட்டப் பாறை வனக்காவல் பழைய தோட்ட பகுதியில் 20 வயது மதிக்கத்தக்க ஆண் யானை இறந்து கிடந்தது. அந்த வழியாக ரோந்து சென்ற வேட்டை தடுப்பு காவலர்கள்இதனைப்பார்த்துஅதிர்ச்சிஅடைந்து, வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். உடனே வனத்துறை உயர் அதிகாரிகள் மற்றும் மருத்துவ குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து வனத்துறையினர் கூறுகையில், ''2 ஆண் யானைகளுக்கு இடையே ஏற்பட்ட கடும் சண்டையில் ஒரு யானை இறந்திருக்கலாம். இறந்த யானையின் இடதுபக்கமுன்னங்காலின்கீழ்பகுதியில் மற்றொரு யானை அதன் தந்தத்தால் தாக்கியதால் இதயம் மற்றும் வாய்ப்பகுதியில் காயம் ஏற்பட்டு இறப்பு ஏற்பட்டுள்ளது'' என்று தெரிவித்தனர். தொடர்ந்து கால்நடை டாக்டர்கள் மனோகரன், அர்னால்ட் வினோத் தலைமையிலான குழுவினர்,

இறந்தயானையைபரிசோதனைசெய்த பின்னர் அப்பகுதியில் புதைத்தனர்

# தமிழர்களையும் தமிழ்நாட்டையும் தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் கழக ஒன்றியங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



தமிழர்களையும் தமிழ்நாட்டையும் தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் கழக ஒன்றியங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திடுமாறு திமுக தலைவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியதையடுத்து சிவகங்கை மாவட்ட முழுவதும் உள்ள ஒன்றியக்கழகங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது.

அந்த வகையில் மாண்புமிகு அமைச்சர் , மாவட்டக்கழக செயலாளர் கேஆர். பெரியகருப்பன் சாக்கோட்டை மேற்கு ஒன்றியக்கழகம் சூரக்குடியில் ஒன்றிய செயலாளர் கோட்டையூர் ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் மேனாள் அமைச்சர் தென்னவன், தலைமைப்பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ். ரவி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, வர்த்தக அணி ருக்மா சரவணன், சேர்மன் ராதிகா, சேர்மன் கார்த்திக் சோலை உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய , கிளைக்கழக திமுகவினர் திரளாக கலந்து கொண்டனர்.

அதேபோல் திருப்புவனத்தில்மாவட்ட துணைச்செயலாளர் சேர்மன் சேங்கைமாறன் , மேற்கு ஒன்றியக்கழக செயலாளர் வசந்தி சேங்கைமாறன், பேரூர் செயலாளர் நாகூர் கனி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி மணலூர் கே. எம். பொற்கோ, ஒன்றிய இளைஞரணி தேவதாஸ், அறிவுக்கரசு, துணைத்தலைவர் ரஹமதுல்லா கான், ஆகியோர் முன்னிலை வகித்தனர்..

சேர்மன் சேங்கைமாறன் கண்டன உரை நிகழ்த்தினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அவைத்தலைவர் பொன் இளங்கோவன், மாவட்ட நிர்வாகிகள் சங்கங்குளம் மேனாள் கவுன்சிலர் ஈஷ்வரன், தொழிலதி??பர் திருநாவுக்கரசு, டி ஆர். சேகர், ஆதிதிராவிடர் அகரம் ரவிச்சந்திரன், பூவந்தி மணிகண்டன், புலியூர் ரவி, தேளி கோபால், தொழிலாளரணி பி. பி. சங்கர் , மடப்புரம் மகேந்திரன், தொண்டரணி ராஜா, மீனவரணி அண்ணாமலை, சொட்டதட்டி சக்திமுருகன், பழையனூர் கிளைக்கழக செயலாளர் திருமுருகன், பழையனூர் ஊராட்சி மேனாள் தலைவர், சுப்பிரமணியன், ஊர்க்காவலன், மாரி, மாணவரணி காளிதாஸ், பாண்டியார் கிருஷ்ணன் உள்ளிட்ட இருநூறுக்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மற்றும்நூறுநாள்வேலைத் திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர்...

இளையான்குடி வடக்கு ஒன்றியம் மற்றும் பேரூர்க் கழக திமுக சார்பில் இளையான்குடி பேரூராட்சி அலுவலகம் முன்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சட்டமன்ற மேனாள் உறுப்பினர் வடக்கு ஒன்றிய செயலாளர் சுப. மதியரசன் , பேரூராட்சி தலைவர் பேரூர்க்கழக செயலாளர் நஜ்முதீன் ஆகியோரது தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் பேரூராட்சி துணைத்தலைவர் டி. கே. இபுறாஹீம், தலைமைப்பொதுக்குழு த. உதயகுமார், மாவட்ட நிர்வாகிகள் அண்டக்குடி முருகானந்தம், பாச்சட்டி சேகர், காளிமுத்து, கண்ணமங்கலம் கூட்டுறவு சங்க மேனாள் தலைவர் சுப. தமிழரசன் , மாவட்ட பிரதிநிதிகள் உதயசூரியன், யாஸின் , சாரதி, ஐடி விங் சுப. அன்பரசன் , கி. கண்ணன், மணிமொழியான், அவைத்தலைவர் பெரியசாமி, பொருளாளர் முருகேசன், சிவனேசன், இராஜேந்திரன், தமிழ்செல்வி பாலசுப்பிரமணியன், இளைஞரணி பிரபு, ஐடி விங் ராஜா, மகளிரணி , மஹாலெட்சுமி, பஞ்சவர்ணம், இராஜேஷ்வரி, பேரூர்க்கழக நிர்வாகிகள் ஜெயினுலாபுதீன், காதர் பாஷா, தௌலத், இளைஞரணி பைரோஸ்கான் , கம்பன் காதர், அஜீஸ் கான், இப்றாஹிம் ஷா, கம்பன் காதர், காசிம், பாலமுருகன், இப்றாஹிம், முத்து, அஸ்லாம், முருகேசன், சத்யேந்திரன், தாமஸ், சேகர், இராஜமாணிக்கம் , கண்ணன்நீலமேகம் சந்தானம், சேது, சண்முகம், ராஜகோபால் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அதேபோல் இளையான்குடி தெற்கு ஒன்றியக்கழகத்தில் ஒன்றிய செயலாளர் ஆறு. செல்வராசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முகமது மஹாதீர் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில்மாவட்ட பிரதிநிதி கே ஏ கே.சையது கான் , வ. கணேசன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தனசேகரன், சாலை சாத்தையா, ஐடி விங் ஆரோன் கிங், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்களது கண்டனங்களை பதிவுசெய்தனர்.

இளையான்குடி கிழக்கு ஒன்றியக்கழக திமுக சார்பில், ஒன்றியக்கழக செயலாளர் வே. தமிழ்மாறன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் தொண்டரணி புலிக்குட்டி, பொருளாளர் ஆரோக்கியதாஸ், , பிரதிநிதிகள் கண்ணன், முத்துக்குமார், குருசாமி, கவுன்சிலர் ஜான் போஸ்கோ, ஒன்றிய இளைஞரணி சிவா, மகளிர் தொண்டரணி முனீஷ்வரி, கணேசன், விவசாய அணி கண்டனி பாஸ்கரன் , விளையாட்டு அணி அர்ஜுன் வைலட் பெர்க்மான்ஸ் உள்ளிட்ட திமுகவினர் கலந்து கொண்டு தங்களது கண்ங்களை பதிவுசெய்தனர்.

மானாமதுரை கிழக்கு.

மானாமதுரை கிழக்கு ஒன்றியக்கழக திமுக சார்பில் ஒன்றிய செயலாளர் துரை இராஜாமணி தலைமையில் சட்டமன்ற மேனாள் உறுப்பினர் சேர்மன் எஸ். மாரியப்பன் கென்னடி , தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் அறங்காவலர் ஏஆர். ஜெயமூர்த்தி, குஃஇராஜாங்கம், இடைக்காட்டூர் ஊராட்சி மேனாள் தலைவர் ஆ. மு. சண்முகநாதன் ஆகியோர் முன்னிலையில் நூற்றுக்கும் மேற்பட்ட திமுகவினர் மற்றும் பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்..

இதேபோல் சாக்கோட்டை கிழக்கு ஒன்றியம் புதுவயலில் ஒன்றியக் கழக செயலாளர் சின்னத்துரை, பேரூராட்சி பக்ருதீன் அலி பாய் ஆகியோர் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது..

இந்த ஆர்ப்பாட்டத்தில் பிரம்மையா, முகமது மீரா, சங்கீதா செல்லப்பன், பழனி உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டு ஒன்றிய மோடி பாஜக அரசிற்கெதிரான கண்டனமுழக்கங்களை எழுப்பினர்.




கோவை ராவ் மருத்துவமனை, கோவை கிளை இந்திய மருத்துவ சங்கம், தி மேஜிக் ஆஃப் ரோட்டரி, ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்பத்தூர் அக்ருதி, ப்ளாசம், ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் சிட்டி ஆகியவையுடன் இணைந்து பெண்களின் ஆரோக்கியம் (ம) எண்டோமெட்ரியோசிஸ் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று கோவை ஆர். எஸ்.புரம் தனியார் மருத்துவமனை முன்பு நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக மேயர் ரங்கநாயகி பங்கேற்றார்.

# சிங்கம்புணரி அருகே விவசாயி வீட்டில் புகுந்து 15 பவுன் தங்கைகள் மட்டும் 40 ஆயிரம் பணம் கொள்ளை சிங்கம்புணரி போலீசார் விசாரணை



சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே ஒசா ரிப்பட்டியில் விவசாயி குணசேகரன் 62வயதுஅவரதுமனைவி விஜய லட்சுமி 56 இவர்கள் வசி த்து வருகின்றனர் இவர் வழக்கம் போல் காலை விவசாய வேலை தோட்ட த்திற்கு சென்று விட்டு மாலை விஜயலட்சுமி மட்டும் சமைப்பதற்கு வீட்டுக்கு திரும்பி வந்து ள்ளார் இந்த நிலையில் வீட்டின் க த வு திறக்கப்பட்டுள்ளது இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தது வீட்டிற்கும் உள்ளே சென்றபோது அங்கு உள்ள பீரோ உடைக்கப்பட்டு இருப்ப தைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர் பீரோ வில் வைத்திருந்த 15 பவுன் தங்க நகை 40 ஆயிரம் பணம் மற்றும் வெள்ளிப் பொருட்கள் கொள்ளை போனது தெரிய வந்துள்ளது சம்பவம் அறிந்து வந்த சிங்க ம்புணரி காவல் நிலைய போலீசார் திரு ட்டு சம்பவம் குறித்து விசாரித்து வருகின்றனர் மேலும் தடைகளை சேகரி த்துக் கொள்ளை யர்க ளை பிடிக்க தீவிரமாக தேடி வருகி ன்றனர் வயதான முதி யோர் சிறிது சிறிதாக சேமித்த பணத்தை திருடி சென்ற சம்பவம் அப்பகுதியில் அச்சத்தையும் சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது

# திருப்புவனம் பறையன்குளம் பள்ளியில் தமிழக அரசு பள்ளிக்கல்வித்துறை சார்பாக பள்ளி ஆண்டு விழா: லதாதேவி, பால்பாண்டி, சுப்புலெட்சுமி, மரியஜெஸிந்தா பங்கேற்பு




சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகேயுள்ள மு. பறையன்கேளம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மு. பறையங்குளம்கிராமத்தில்தமிழ்நாடு அரசு பள்ளி கல்வித்துறை சார்பாக பள்ளி ஆண்டு விழா நடைபெற்றது.

ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியை மரிய ஜெஸிந்தா தலைமையில் நடைபெற்ற இந்த ஆண்டு விழா நிகழ்ச்சியானது பள்ளி மாணவர்களது பல்வேறு கலைநிகழ்ச்சிகளோடு நடைபெற்ற இந்த விழாவில் வட்டார கல்வி அலுவலர்கள் லதாதேவி, பால்பாண்டி, வட்டார வளமைய பயிற்றுனர் சுப்புலெட்சுமி, ஆசிரியர் இராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்..

சிறப்பாக நடைபெற்ற இந்த ஆண்டுவிழாவில் பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள், ஊர்பொது மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ரம்ஜான் வாழ்த்து



சென்னை, மார்ச்.31

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள ரமலான் வாழ்த்து செய்தியில் கூறி இருப்பதாவது:

அறம் பிறழா மனித வாழ்வை வலியுறுத்தும் ரமலான் திருநாளைக் கொண்டாடும் இசுலாமிய சகோதர, சகோதரிகளுக்கு உளம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இஸ்லாமிய சமுதாய மக்கள் ஒரு மாத காலம் கடுமையாக நோன்பிருந்து பசித்துன்பம் என்பதை அனுபவத்தால் உணர்ந்து, ஏழை எளியோர் பால் இரக்கம் கொண்டு, ஈகைப் பண்பு சிறக்க ரமலான் திருநாளை மிகுந்த மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறார்கள்.

"எனது கல்லறையை அலங்காரம் செய்யாதீர்கள்; என்னை இறைவனாக ஆக்கி விடாதீர்கள்; எனக்கு முன்னாள் வாழ்ந்த நபிமார்களை அப்படி ஆக்கிவிட்டார்கள். உலர்ந்த ரொட்டித் துண்டுகளையும், காய்ந்த பேரீச்சம் பழங்களையும் உண்டு வாழ்ந்த ஓர் ஏழைப் பெண்ணின் மகன் என்று கூறுவதில் நான் பெருமையடைகிறேன்" என்று தன் அன்பர்களுக்குக் கூறியவர் அண்ணல் நபிகள் பெருமான்.

பொய்மை, ஆடம்பரம் இவற்றைத் தவிர்த்து எளிமை, அன்பு, அடக்கம் இவற்றை குணநலன்களாகக் கொள்ள வழி காட்டிய கருணை வள்ளல் அவர்.

பசித்தோருக்கு உணவிடவும், சமத்துவ, சகோதரத்துவ உணர்வுடன் அனைவரையும் நேசிக்கவும் வழிகாட்டிய பெருமகனார்.

"தொழிலாளரின் வியர்வை உலரும் முன் அவன் கூலியைக் கொடுத்து விடு" என்று உழைப்பை மதித்திடும் உத்தமப் பண்பை உலகுக்கு நீதியாய் போதித்தவர்.

மனிதவாழ்வுமேன்மை அடைவதற்கான இத்தகைய மார்க்கங்களைப் போதிப்பதால்தான் நபிகள் நாயகத்தை மக்கள் என்றும் போற்றுகிறார்கள். அத்தகைய நபிகள் பெருமகனார் போதித்த நெறியில் வாழ்ந்து, நோன்புக் கடமைகளை நிறைவேற்றிமுடித்துள்ள மனநிறைவோடு, ரமலான் திருநாளைக் கொண்டாடும் அன்பிற்குரிய இசுலாமிய சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற முறையிலும், முதலமைச்சர் என்ற பொறுப்பிலும் எனது உளமார்ந்த நல்வாழ்த்துகளை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோவிலில் 5 மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் தரிசனம்



திருச்செந்தூர், மார்ச்.31

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம்படைவீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் சிறந்த பரிகார தலமாகவும், ஆன்மீக சுற்றுலா தலமாகவும் விளங்கி வருகிறது.

இங்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்து பரிகார பூஜைகள் செய்து வழிபட்டு செல்கின்றனர்.

நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வதால் பக்தர்கள் வசதிக்காக திருப்பதி இணையாக சாமி தரிசனம் செய்யயும் வகையில் மெகா திட்ட வளாக பணிகள் நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக பணிகள் முடிந்து பக்தர்கள் தங்கும் விடுதி, இரண்டாம் கட்டமாக பக்தர்கள் காத்திருக்கும் அறை, அலுவலக கட்டிடம் கலையரங்கம் என முடிவுற்ற பணிகளை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்தில் இருந்து சில நாட்களுக்கு முன்பு காணொலி காட்சி வழியாக திறந்து வைத்தார்.

அடுத்த கட்டமாக கோவில் திருப்பணிகள் உள்பட அனைத்து பணிகளும் முடித்து ஜூலை 7ந் தேதி மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. அதற்கான பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளான இன்று காலையில் இருந்தே ஏராளமான பக்தர்கள் கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் சுமார் 5 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

இதையொட்டி இன்று கோவில் நடை அதிகாலை 4 மணிக்கு திறக்கப்பட்டது.4.30மணிக்கு விஸ்வரூப தரிசனம், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம், அதனை தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடைபெற்றது. தரிசனத்திற்காக வரிசையில் காத்திருக்கும் பக்தர்கள் திடீரென மயக்கம் அடைந்தாலோ அல்லது ஏதேனும் உடல் நிலை குறைவு ஏற்பட்டால் உடனடியாக வெளியேற அவசர கால வழி அமைக்கப்பட்டுள்ளது.

கோவில் வளாகத்தில் தற்போது பெருந்திட்ட வளாக பணிகள் நடைபெற்று வருவதால் நாழிக்கிணறு வாகன நிறுத்தம் தற்காலிகமாக நாளை 31 ந்தேதி முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதற்காக பக்தர்கள் வாகனங்கள் டி.பி. ரோட்டில் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள வாகன நிறுத்தத்தை பயன்படுத்தி கொள்ள வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

மேலும் பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்பட்டதாலும், பக்தர்கள் வந்த வாகன நெருக்கடியாலும் பக்தர்கள் வாகனங்கள் தெப்பக்குளம் அருகிலும், தாலுகா அலுவலகம் அருகிலும் வாகனங்களை நிறுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் நகர எல்லைக்குள் வாகன நெருக்கடி காணப்பட்டது.

# தண்ணீர் வரத்து இல்லாததால் 57 அடியாக குறைந்த வைகை அணை நீர்மட்டம்



கூடலூர், மார்ச்.31

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள வைகை அணை மூலம் 5 மாவட்ட விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. பருவமழையின் போது மழை கைகொடுத்ததால் அணை முழு கொள்ளளவான 71 அடியை எட்டியது. அதனை தொடர்ந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டதால் நீர்மட்டம் குறைந்து கொண்டு வருகிறது. அவ்வப்போது மழை பெய்தாலும் வெயிலின் தாக்கம் குறையவில்லை. இதனால் வைகை அணைக்கு நீர்வரத்து படிப்படியாக சரிந்து நேற்று முற்றிலும் நின்று விட்டது.

இதனால் அணையின் நீர்மட்டம் 57.71 அடியாக குறைந்துள்ளது. அணையில் முறைநீர் பாசன அடிப்படையில் தற்போது மதுரை, திண்டுக்கல் மாவட்ட பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. அதன்படி குடிநீருடன் சேர்த்து 722 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. அணையில் 3178 மி.கன அடி நீர் இருப்பு உள்ளது.

முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டம் 113 அடியாக உள்ளது. அணைக்கு வரும் 105 கனஅடி நீர் அப்படியே திறக்கப்படுகிறது. 1392 மி.கனஅடி நீர் இருப்பு உள்ளது.

மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 31 அடியாக உள்ளது. வரத்தும், திறப்பும் இல்லை.

சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 66.25 அடியாக உள்ளது. வரத்து இல்லாத நிலையில் 3 கனஅடி நீர் திறக்கப்படுகிறது.

சண்முகாநதி அணையின் நீர்மட்டம் 34 அடியாக உள்ளது. வரத்தும், திறப்பும் இல்லை. மழை எங்கும் இல்லை.

# எஸ்.ஏ கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பில் உலக தண்ணீர் தின கிராம சபை கூட்டம்

கோவை, மார்ச்.31

எஸ்.ஏ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உன்னத் பாரத் அபியான் மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் ஆகியவை இணைந்து உலக தண்ணீர்தினத்தைமுன்னிட்டு மார்ச் 29, 2025 (நேற்று) அன்று மேட்டுப்பாளையத்தில் உள்ள சமூக மண்டபத்தில் நீர்ப் பாதுகாப்பை ஊக்குவிக்கும் பொருட்டு மாணவர்களையும் உள்ளூர்வாசிகளையும் ஒன்றிணைத்து கிராம சபை கூட்டத்தை நடத்தின.




மாணவர்கள் நிலையான நீர் மேலாண்மை, பாதுகாப்பு நுட்பங்கள் மற்றும் சமூகம் சார்ந்த முயற்சிகள் குறித்து கிராமவாசிகளுடன் விவாதித்தனர்.

மழைநீர் சேகரிப்பு, திறமையான நீர்ப்பாசன முறைகள் மற்றும் நீர் வீணாவதைக் குறைத்தல் உள்ளிட்ட நீர்ப் பாதுகாப்பிற்கான நடைமுறை நடவடிக்கைகளை வலியுறுத்தினர்.

நிலையான நீர் நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வையும் அர்ப்பணிப்பையும் வலுப்படுத்துவதற்கான ஒரு தளமாக கிராம சபை செயல்பட்டது.

எதிர்கால சந்ததியினருக்கு நீர் வளங்களைப் பாதுகாக்க சமூகம் தலைமையிலான நடவடிக்கைகளின்அவசியத்தைஇந்த நிகழ்வு வலுப்படுத்தியது.

# அரசு பள்ளிகளில் தமிழ் ஆசிரியர் பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டும் ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை: மார்ச்.31

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் தமிழை முதன்மைப் பாடமாகத் தேர்வுசெய்து பட்டப்படிப்பு (பி.ஏ), பட்ட மேற்படிப்பு (எம்.ஏ), இளம் முனைவர் (எம்.பில்), முனைவர் (பி.எச்டி) படிப்புகளையும், அவற்றுடன் கல்வியியல் (பி.எட்) பட்டமும் பெற்ற 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வேலைவாய்ப்பின்றியும், தகுதிக்கு குறைவான

பணிகளை பார்த்துக் கொண்டும் அவதிப்பட்டு வருகின்றனர். அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைப் போலவே தொடக்கப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் தனியாக தமிழாசிரியர் பணியிடங்களை தமிழக அரசு ஏற்படுத்த வேண்டும்;

தனியார்பள்ளிகளிலும் தமிழ்க் கட்டாயப் பாடமாக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றுக்கும் அரசு மூலம் அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு இணையான ஊதியத்தில் தமிழாசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்; தமிழ்ப் படித்து ஐந்தாண்டுகளுக்கும் மேலாக வேலையின்றி வாடும் தமிழாசிரியர்களுக்கு மாதம் ரூ.10,000 உதவித் தொகையை தமிழக அரசு வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# டயர் வெடித்த நிலையில் சென்னை வந்த விமானம்.. சாமர்த்தியமாக தரையிறக்கிய விமானி

சென்னை, மார்ச்.31

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் இருந்து சென்னைக்கு இன்று காலைவந்தவிமானத்தின் டயர் திடீரென வெடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த விபத்தில் நல்வாய்ப்பாக விமானத்தில் இருந்த அனைவரும் பத்திரமாக உயிர் தப்பியுள்ளனர்.

சென்னைக்கு வந்து கொண்டிருந்த விமானம் தரையிறக்கப்படுவதற்கு முன், அதன் டயரில் கோளாறு ஏற்பட்டு இருப்பதை விமானி கண்டறிந்துள்ளார். அதனைத் தொடர்ந்து, அவர் விமான நிலைய அதிகாரிகளுக்கு இது குறித்து தகவல் கொடுத்தார். ஓடுதளத்தில் உரிய முன்னேற்பாடுகளுடன் விமான நிலைய பணியாளர்கள் இருந்தனர். டயரில் கோளாறு ஏற்பட்ட நிலையில், சாதுரியமாக செயல்பட்ட விமானி அசம்பாவிதம் ஏற்படாத வகையில் விமானத்தை பத்திரமாக தரையிறக்கினார். தரையிறங்கிய பின் விமானத்தின் டயர்களை பரிசோதனை செய்ததில், 2வது சக்கரத்திலுள்ள டயர் வெளியே வெடித்த நிலையில் இருந்தது கண்டறியப்பட்டுள்ளது.

# படத்துக்கு பல மொழி வேண்டும், பாடத்திற்கு கூடாதா? விஜய் தி.மு.க. எதிர்ப்பை தீவிரப்படுத்த வேண்டும் தமிழிசை

சென்னை, மார்ச்.31

தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் சென்னையில் இன்று நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தி.மு.க.வுக்கும், த.வெ.க.வுக்கும்தான் போட்டி என்று பேசுகிறார். எதுகை மோனையில் வேண்டுமானால் அதுசரியாகஇருக்கலாம். ஆனால் நீங்கள் எதிரில் இல்லை என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும்கட்சியில்அடிப்படையிலேயே மிக தீவிரமாக மக்கள் பணியாற்றி முன்னுக்கு வந்தனர்.

விஜய் முதலில் தி.மு.க.வுக்கான எதிர்ப்பை தீவிரப்படுத்த வேண்டும்.அந்தகாலத்து நடிகர்களின் படங்கள் தமிழ்நாட்டுக்குள்



ளேயே இருந்தது. ஆனால் இன்று விஜய் படம் தெலுங்கானாவில் ஓஹோவென்று ஓடுகிறது. உங்களுக்கு பல மொழிகள் தேவைப்படும் போது குழந்தைகளுக்கும் இணைப்பு மொழி தேவைப்படுகிறது என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் படத்திற்கு பல மொழிகள் வேண்டும். பாடத்திற்கு பல மொழிகள் வேண்டாம் என்று சொன்னால் எப்படி? விஜய்யின் பேச்சில் தெளிவற்ற தன்மைதான் உள்ளது.

எங்களை தி.மு.க.வின் பி அணி என்று விஜய் சொல்கிறார். தி.மு.க. சொல்வதைத்தான் நீங்களும் சொல்கிறீர்கள். நீங்கள்தான் தி.மு.க.வின் பி அணி.

பரந்தூர் விமான நிலையம் வேண்டாம் என்று விஜய் சொல்கிறார். உங்களுக்கு பனையூர் வேண்டும். நீங்கள் சாலிகிராமத்தில் எனது வீட்டு அருகில் தான் சிறிய வீட்டில் இருந்தீர்கள். உங்கள் வாழ்க்கை விரிவடைய விரிவடைய உங்களுக்கு பனையூர் தேவைப்படுகிறது. அப்படியென்றால் தமிழக மக்களின் வாழ்க்கை விரிவடைய விரிவடைய பரந்தூர் தேவைப்படுகிறது. தமிழக அரசு கொடுக்கும் இடத்தில்தான் மத்திய அரசு விமான நிலையம் அமைக்கும்.

பிரதமர் மோடியை எதிர்த்து பேசும் தைரியும் இருப்பதாக கூறும் விஜய் தனது தயாரிப்பாளரை எதிர்த்து பேசி இருப்பாரா? உங்களுடைய டைரக்டரை எதிர்த்து பேசி இருப்பீர்களா?

விஜய் இன்னும் கொஞ்சம் அழுத்தமாகவும், ஆழமாகவும் அரசியலை கற்றுக் கொண்டு பேச வேண்டும். செங்கோட்டையன் டெல்லி சென்று அமித்ஷாவை சந்தித்தது ஏன் என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

# சட்டசபை தேர்தலை எதிர்கொள்ள வியூகம்: அ.தி.மு.க தமிழக பா.ஜ.க. தலைவர்கள் விரைவில் நேரடி பேச்சுவார்த்தை

சென்னை: மார்ச்.31

தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலை சந்திப்பதற்கு அனைத்துக் கட்சிகளும் தயாராகி வருகின்றன. தி.மு.க. கூட்டணியை வீழ்த்தி ஆட்சியில் அமர வேண்டும் என்பதில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உறுதியாக உள்ளார். இதற்காக பா.ஜ.க.வுடன் மீண்டும் கூட்டணி அமைப்பதற்கு அ.தி.மு.க. திட்டமிட்டு உள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு டெல்லி சென்று மத்திய மந்திரி அமித்ஷாவை சந்தித்த எடப்பாடி பழனிசாமி. இது தமிழகத்தின் நலன்களை காப்பதற்கான சந்திப்பு என்றும் கூட்டணி பற்றி எந்த பேச்சுவார்த்தையும் நடத்தப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

ஆனால் மத்திய மந்திரி அமித்ஷாவோ தமிழகத்தில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக வெளிப்படையாக அறிவித்து விட்டார். இதன் மூலம் 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2021ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில்பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்து, தேர்தலை சந்தித்த அ.தி.மு.க. பாராளுமன்ற தேர்தலின் போது கூட்டணியில் இருந்து வெளியேறியது. இதன் காரணமாக 2 கட்சிகளுமே தனித்தனி அணியை உருவாக்கி போட்டியிட்டு தோல்வியையே தழுவின. அது போன்ற நிலை அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் 2 கட்சி தலைவர்களும் உறுதியோடு உள்ளனர்.

பாராளுமன்ற தேர்தலின் போது கூட்டணி முறிவால் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க.வை சேர்ந்த தலைவர்கள் மாறி மாறி விமர்சித்துக்கொண்டனர். பா.ஜ.க.வால் தான் சிறுபான்மையினர் ஓட்டுகளை பெற முடியாமல் போய் விட்டது. அதுவே சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. தோற்பதற்கு முக்கிய காரணமாகி விட்டது என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் பலர் தெரிவித்தனர்.

இதற்கு பா.ஜ.க. தலைவர்களும்பதிலடிகொடுத்திருந்தனர். இது போன்ற காரணங்களால் 2 கட்சி தலைவர்களிடையே மனக்கசப்பும் ஏற்பட்டது. தற்போது மீண்டும் கூட்டணி பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டுள்ளதால் அ.தி.மு.க. பா.ஜ.க. இடையே இணக்கமான சூழலை ஏற்படுத்த வேண்டும் என்பதே 2 கட்சிகளின் விருப்பமாக உள்ளது.

இதற்காக தமிழக பா.ஜ.க. தலைவர்கள் மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என டெல்லி பா.ஜ.க. தலைமை அறிவுறுத்தி உள்ளது. இதன்படி 2 கட்சிகளை சேர்ந்தவர்களும் கூட்டணி விஷயத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் எந்தவித கருத்துக்களையும் தெரிவிக்கக் கூடாது எனவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி தொடர்பாக எடப்பாடி பழனிசாமி டெல்லியில் அமித்ஷாவை சந்தித்து முதல் கட்ட பேச்சுவார்த்தையை நடத்தி உள்ளநிலையில் அடுத்தடுத்த பேச்சுவார்த்தைகளையும் சுமூகமாக நடத்தி முடிக்க வேண்டும் என்று தமிழக பா.ஜ.க. தலைவர்களிடம் அறிவுறுத்தப்பட்டு உள்ளது. தமிழகத்தில் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்தால் மட்டுமே வெற்றி பெற முடியும் என்பதால் அதற்கான சூழலை உருவாக்குவதில் தமிழக தலைவர்கள் தீவிரமாக செயலாற்ற வேண்டும் என்றும் டெல்லி பா.ஜ.க. தலைமை தெரிவித்துள்ளது.

இப்படி அ.தி.மு.க. பா.ஜ.க. தலைவர்கள் இடையே இணக்கமான சூழலை உருவாக்கி விட்டு அதன் பிறகே 2வது கட்ட கூட்டணி பேச்சுவார்த் தையை நேரடியாக நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டு இருக்கிறது.

இந்த கூட்டணியில் பா.ம.க., தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சிகளும் இடம்பெறும் பட்சத்தில் அது வலிமையான கூட்டணியாக நிச்சயம் மாறும் என்றே அ.தி.மு.க., பா.ஜ.க. தலைவர்கள் நம்பிக்கை தெரிவித்து உள்ளனர்.

இப்படி அ.தி.மு.க. பா.ஜ.க. இடையேயான கூட்டணி பேச்சுவார்த்தை தீவிரப்படுத்தப்பட்டு இருப்பது தமிழக அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

# தி.மு.க.வுக்கு எதிரான விஜய்யின் நிலைப்பாட்டை வரவேற்கிறேன் சீமான்

கே.கே. நகர்: மார்ச்.31

நாம்தமிழர்கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் திருச்சி விமான நிலையத்தில் நிருபர்களிடம் கூறியதாவது:

அமைச்சர் கே.என். நேருவின் தம்பி கொலை நடந்து 13 ஆண்டு கடந்த நிலையிலும் குற்றவாளி யார்? என்று தெரியவில்லை. பெரிய தலைவர்களின் நிலை இப்படி என்றால் சாதாரண மக்களுக்கு என்ன பாதுகாப்பு.

பொள்ளாச்சியில் பாலியல் வன்கொடுமை நடந்துள்ளது. இந்த வழக்கு இழுத்தடிக்கப்படுகிறது. உரிய விசாரணை நடத்தப்படவில்லை.

அரசுக்குஎதுதேவையோ எடுத்துக் கொள்ளப்படுகிறது. மற்றவைகளை மூடி மறைக்கப்படுகிறது.

டாஸ்மாக்கில் அமலாக்கத்துறை சோதனை நடந்தது அனைவருக்கும் தெரியும். ஆனால் அதன் பின்னர் என்ன நடந்தது? என்பது யாருக்கும் தெரியாது.

நீதிமன்றங்கள், தேர்தல் ஆணையம் அனைத்தும் தி.மு.க.வின் அலுவலகம் போன்று செயல்படுகிறது.

நான் பெரியார் குறித்து பேசியதற்கு 100க்கும் மேற்பட்ட இடங்களில் என் மீது வழக்கு தொடுக்கப்பட்டது. ஆனால்நான் கொடுக்கும் வழக்கு ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

ஆனால் என் மீது கொடுக்கப்படும் வழக்குகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

என் மீது பல்வேறு இடங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகளை ஒரே வழக்காக விசாரிக்க வேண்டும் என்று கேட்ட



பொழுது நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான எல்லாவழக்குகளும் ஒன்றிணைந்து விசாரிக்கப்படுகிறது.

இதன் மூலம் ஒட்டுமொத்த மக்களின் நீதிமன்றம் மதிப்பைஇழந்து வருகிறது.

வருகிற சட்டமன்ற தேர்தலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவார் என சி.ஓட்டர் கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டு ள்ளது. நாங்கள் பல்வேறு தேர்தலில் போட்டியிட்டு 36 லட்சம் வாக்குகளை பெற்றுள்ளோம். ஆனால், எங்கள் கட்சி அந்த கருத்துக்கணிப்பு பட்டியலில் இடம்பெறவில்லை.

இதிலிருந்து கருத்துக்கணிப்பின் நேர்மை புலப்படுகிறது. இது கருத்துக்கணிப்பல்ல, கருத்து திணிப்பு. நாங்கள் அரசியல் வியாபாரிகள் அல்ல, போராளிகள் வரும் சட்டமன்றத் தேர்தலிலும் தனித்து போட்டியிடுவோம்.

ஆம்ஸ்டராங் கொலை வழக்கில் செல்வப்பெருந்தகைக்கு தொடர்புள்ளதாக ஊடகங்கள் கூறுகின்றன. அதில் உண்மை உள்ளதா இல்லையா என தெரியவில்லை. அதில் வழக்கில்தொடர்புடைய 3 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். அவர்கள் குற்றவாளிகளா அல்லது குற்றத்தில் தொடர்புடையவர்களா? என்பதை அரசு கூற வேண்டும்.

சவுக்குசங்கர் வீடு தாக்குதலுக்கு உள்ளானது. குற்றத்தை யார் புரிந்தார்? என்பது வெளிப்படையாகவே தெரியும். அதற்கு எதற்கு சி.பி.சி.ஐ.டி. விசாரணை. அதிகாரத்தில் உள்ளவர்களே அந்த குற்றச்செயல்களை செய்துள்ளனர்.

இது பூனை தன் குட்டியைகவ்வதும், எலியை பிடிப்பதற்கு உள்ளவித்தியாசமாகும். எங்களை கடிக்கும் போது எலியை கடிப்பது போல் கடிக்கிறீர்கள். கொடுமையானவர்களே குற்றச் செயல்களில் உடந்தையானவர்களை பூனை குட்டியை கவ்வதை போல் பிடிக்கிறீர்கள்.

சவுக்கு சங்கர் வீடு தாக்கப்பட்ட வழக்கில் ஒப்புக்காக5பேர்மீதுவழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதிகாரம் அவர்கள் கையில் உள்ளதால் நாட்டில் குற்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சுட்டு பிடிப்பதற்கு காரணம் அவர்களது இயலாமை. அவர்களை பிடித்தால் பல்வேறு உண்மைகள் வெளியே வரும் என்பதால் அவர்களை சுட்டுக்கொன்று விடுகின்றனர்.

சங்கிலி திருடர்களை சுட்டு பிடிப்பதற்கு என்ன காரணம்? கள்ளச்சாராயம் அருந்தி 65 பேர் உயிரிழந்த சம்பவத்தை விட இது பெரிய சம்பவமா?

குடித்துவிட்டு பாட்டிலை திரும்பி கொடுத்தால்பத்து ரூபாய், பாடையிலே படுத்துவிட்டால் 10 லட்சரூபாய், இது திராவிட மாடல் பாலிசி. வரும் சட்டமன்றத் தேர்தலில் த.வெ.க. தனித்து போட்டியிட்டு தி.மு.க.வை வீழ்த்துவேன் என்ற விஜய் நிலைப்பாட்டை வரவேற்கிறேன்.

நான் பிரபாகரனை போல தனித்தே நின்று போட்டியிடுவேன். நான் புலி போன்றவன் தனித்தே நின்று போட்டியிடுவேன். படை சேர்த்துக்கொண்டு தேர்தலை சந்திப்பவன் அல்ல நான். கூட்டத்தில் ஒரு ஆளாக போட்டியிட துணிவோ, வீரமோ தேவையில்லை, தனித்து நிற்கவும் தான் துணிவும் வீரமும் தேவை.

எதிரியை தீர்மானித்து விட்டு தான் களத்தில் இறங்கி உள்ளோம். எந்த குழப்பமும் இல்லை தடுமாற்றமும் இல்லை. இன்னும் சில மாதங்கள் உள்ளது. தேர்தலில் நாங்கள் வாங்கப்போவது தி.மு.க., அ.தி.மு.க. ஓட்டு அல்ல, மக்களின் ஓட்டு தான்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழக அரசு வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுகிறது அமைச்சர் ரகுபதி



புதுக்கோட்டை: மார்ச்.31

தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி புதுக்கோட்டையில் நிருபர்களிடம் கூறியதாவது:

தொகுதி சீராய்வு குறித்து பாதிக்கப்பட்ட மாநிலங்கள் ஒருங்கிணைத்து கலந்து ஆலோசனைக் கூட்டத்திற்கு தமிழக முதல்வர் 63 கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார். அதில் 58 கட்சிகள் கலந்து கொண்டன.

பாதிக்கப்பட்ட மாநிலங்களை ஒருங்கிணைத்து மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கவே கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தற்போது தென் மாநிலங்களில் வளர்ச்சி விகிதம் 23.4 சதவீதம் ஆகவும் வடமாநிலங்களின் வளர்ச்சி சதவீதம் 24.39 ஆகவும் உள்ளது.

மக்கள் தொகையை பொறுத்தவரை தென் மாநிலங்களில் 12.53 சதவீதம் கட்டுப்படுத்தி உள்ளது. ஆனால் வட மாநிலங்கள் 21.83 சதவீதம் ஆக உள்ளது. பொருளாதார ரீதியில் தென் மாநிலங்கள் பங்களிப்பு 36 சதவீதம், வட மாநிலங்களில் பங்களிப்பு 20 சதவீதமே உள்ளது.

ஆனால் தென் மாநிலங்களில் கிடைக்கும் நிதி பகிர்வு 27 சதவீதமாக உள்ளது. வடமாநிலங்களில் இருந்து கிடைக்கக்கூடிய பகிர்வு தொகை 42.5 சதவீதம் ஆக உள்ளது. பட்ஜெட்டில் 100 ரூபாய்க்கு தமிழ்நாட்டுக்கு 29 பைசா மட்டுமே ஒதுக்கப்படுகிறது.

அதைப்போல் கர்நாடகாவுக்கும் 14 ரூபாய் கொடுக்கப்படுகிறது. பீகார் உள்ளிட்ட மாநிலங்களுக்கு அதிக அளவில் 100 ரூபாய்க்கு 900 ,400 ரூபாய் விகிதத்தில் ஒதுக்கப்படுகிறது.

மது விற்பனை அதிகமாக நடைபெறும் 10 மாநிலங்களுக்குள் தமிழ்நாடு இல்லை. மது விற்பனையில் பா.ஜ.க. ஆளும் மாநிலமான ராஜஸ்தான் முதலிடம் வகிக்கிறது. மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டுள்ள குஜராத் மாநிலத்தில் 2006ல் மோடி முதல்வராக இருந்தபோது வருவாய் அதிகரிக்கும் நோக்கில் வைப்ரண்ட் குஜராத் என்ற பெயரில் மது விற்பனைக்கு உரிமம் வழங்கியது.

வெளிநாட்டில் இருந்து வருபவர்கள், வெளி மாநிலையில் இருந்து வருபவர்கள் மது அருந்த அனுமதிக்கப்பட்டனர். அந்த மாநிலத்திலேயே அதிக விலைக்கு மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தமிழக அரசு வெளிப்படத் தன்மையுடன் ஆட்சி நடத்தி வருகிறது . மது பான கொள்முதல் மற்றும் 100 நாள் வேலைத் திட்டத்தில் முறைகேடு இருந்தால் மத்திய அரசு கமிஷன் அமைத்து விசாரணை மேற்கொள்ளலாம்.

தொகுதி மறுசீராய்வினால் மக்கள் தொகை அதிக அளவில் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த தென் மாநிலங்களில் எம்பிக்கள் சீட்டுகள் குறைய வாய்ப்புள்ளது.

வடமாநிலங்களில் மக்கள் தொகை கணக்குப்படி எம்.பி.க்கள்சீட்டுகள் அதிகரிக்கப்படாது என சொல்ல அமித்ஷா தயாரா? வக்பு வாரிய சொத்துக்கள் அல்லாஹவுடைய சொத்துக்கள்.

அவற்றை அபரிக்கவே தற்பொழுது வக்பு வாரிய திருத்த சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

31.3.2025

# கோவில்பட்டியில் மத்திய அரசைக் கண்டித்து கனிமொழி எம்.பி தலைமையில் ஆர்ப்பாட்டம்




தூத்துக்குடி மார்ச்.31

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், 100 நாள் வேலை உறுதித் திட்டத்திற்கு விடுவிக்க வேண்டிய ரூ.4,034 கோடி நிதியை வழங்காமல்காலம்தாழ்த்தி வரும் மத்திய அரசைக் கண்டித்து, கோவில்பட்டி மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்துகொண்டு கண்டன முழக்கமிட்டு, கண்டன உரையாற்றினார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில், தூத்துக்குடி வடக்குமாவட்டதி.மு.க. செயலாளரும், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சருமான கீதா ஜீவன் முன்னிலை வகித்தார். தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கோவில்பட்டி நகர்மன்ற தலைவர் கா.கருணாநிதி, ஒன்றிய செயலாளர் வீ.முருகேசன், தலைமைக் கழக பேச்சாளர் சரத் பாலா, மாவட்டத் துணைச் செயலாளர் ஏஞ்சலா மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், வேலை உறுதித் திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்திக் கோஷமிட்டனர்.

# நீட் தற்கொலைகளுக்கு மத்திய, மாநில அரசுகளே பொறுப்பு: அன்புமணி ராமதாஸ்



சென்னை மார்ச்.31

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மருத்துவப் படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வில் போதிய மதிப்பெண்களை எடுக்க முடியாதோ? என்ற அச்சத்தில் சென்னையை அடுத்த கிளாம்பாக்கத்தில் தர்ஷினி என்ற மாணவி தூக்கிட்டுதற்கொலைசெய்து கொண்டிருக்கிறார். தர்ஷினியை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிளாம்பாக்கத்தைச் சேர்ந்த மாணவி தர்ஷினி ஏற்கனவே இருமுறை நீட் தேர்வு எழுதியும் போதிய மதிப்பெண்களைபெற முடியாததால் மருத்துவப் படிப்பில் சேர முடியவில்லை. இந்த முறையாவது மருத்துவப் படிப்பில் சேர்ந்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் சென்னை அண்ணாநகரில் உள்ள தனியார் பயிற்சி மையத்தில் தர்ஷினி பயின்று வந்தார். நீட் தேர்வுக்கு இன்னும் ஒரு மாதம் மட்டுமே உள்ள நிலையில், தம்மால் போதிய மதிப்பெண் பெற முடியாதோ? என்ற அச்சத்தில் தான் அவர் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

தமிழ்நாட்டில் நீட் தேர்வு அச்சத்தால் நடப்பு மார்ச் மாதத்தில் தற்கொலைசெய்துகொண்ட இரண்டாவது மாணவி தர்ஷினி ஆவார். இதற்கு முன் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தை யடுத்த தாதாபுரம் கிராமத்தைச் சேர்ந்த இந்து மதி என்ற மாணவி வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். நீட் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டு 8 ஆண்டுகளாகியும் தற்கொலைகள் தொடர்வது பெரும் கவலையளிக்கிறது.

நீட் தேர்வு தமிழகத்துக்கு தேவையில்லாத ஒன்று. மருத்துவக் கல்வியின் தரத்தை அதிகரிக்கவோ, மருத்துவக் கல்வி வணிகமயமாவதைத் தடுக்கவோ நீட் தேர்வு எந்த வகையிலும் உதவவில்லை என்பது கடந்த 8 ஆண்டுகால புள்ளிவிவரங்களில் இருந்து உறுதியாகிறது. இதை உணர்ந்து நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று பாமக தொடர்ந்து வலியுறுத்தி வரும் போதிலும் அதை மத்திய அரசு செவிமடுக்கவில்லை.

தமிழகத்தில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அடுத்த நாளே நீட் தேர்வை ரத்து செய்வோம் என்று வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று வரை நீட் தேர்வை ரத்து செய்யவில்லை. மாணவ, மாணவிகளின் தற்கொலைக்கு மத்திய, மாநில அரசுகள் தான் பொறுப்பேற்க வேண்டும். மாணவச் செல்வங்களைக் காக்க நீட் தேர்வை ரத்து செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்கொலை செய்துகொண்ட மாணவி தர்ஷினியின் குடும்பத்திற்கு தமிழக அரசு ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அ.தி.மு.க உடன் கூட்டணி அமைந்தால் ராஜினாமா: எனது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை அண்ணாமலை



சென்னை, மார்ச்.31

அதிமுக உடன் கூட்டணி இல்லை என தெளிவாக இருக்கிறேன் என்றும் அவ்வாறு இருப்பின் ராஜிமானா செய்வேன் என்றுகூறினீர்களேஎன்று செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு பாஜக மாநில தலைவர் அண்ணாமலை பதில் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

எனது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. எப்போதும் பேச்சை மாற்றி பேசுபவன் நான் இல்லை. வருங்காலத்தில் என்னை பார்ப்பீர்கள், எதையும் மாற்றி பேச மாட்டேன்.

நான் தெளிவாக இருக்கின்றேன். என்னால் யாருக்கும் எந்த பிரச்சனையும் வராது.

பாஜக வளர்ச்சி அடைய வேண்டும் என்பதேஎனதுநிலைப்பாடு.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கோடை வெப்பத்தால் முன்கூட்டியே தொடங்கும் இறுதித்தேர்வு

சென்னை, மார்ச்.31

தமிழகத்தில் கோடை வெப்பம் சுட்டெரிப்பதால் 1 முதல் 5ம் வகுப்புகளுக்கான இறுதித்தேர்வு தேதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, ஏப்ரல் 9ந்தேதி தொடங்குவதாக இருந்த இறுதித்தேர்வு முன்கூட்டியே ஏப்ரல் 7ந்தேதி தொடங்குகிறது. தற்போது இறுதித் தேர்வை ஏப்ரல் 7ந்தேதி தொடங்கி 17ந்தேதி வரை நடத்தி முடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோரின் வேண்டுகோளை அடுத்து முதலமைச்சர் உத்தரவின் பேரில் பள்ளிக்கல்வித் துறை அறிவித்துள்ளது.

முன்னதாக 1 முதல் 5ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ஏப்ரல் 9ந்தேதி இறுதித்தேர்வு தொடங்கி 21ந்தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீவைகுண்டம் அருகே தாமிரபரணி ஆற்றில் மூழ்கி 5 வயது குழந்தை உட்பட இருவர் உயிரிழப்பு



தூத்துக்குடி மார்ச்.31

தூத்துக்குடி மாவட்டம் நாசரேத் அருகே உள்ள ஒய்யாங்குடி கிராமத்தைச் சேர்ந்தவர் லாரன்ஸ். மேட்டுப்பாளையத்தில் பேன்சி ஸ்டோர் வைத்துள்ள லாரன்ஸ் அங்கு குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். ஒய்யாங்குடி பகுதியில் நடைபெற்ற கோவில் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக லாரன்ஸ் குடும்பத்தினருடன் வந்துள்ளார்.

இந்த நிலையில் இன்று குடும்பத்தினருடன் தென்திருப்பேரையில் தாமிரபரணி ஆற்றில் குளிப்பதற்காக சென்றுள்ளார். ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தபோது, லாரன்சின்மனைவி கிளாடிஸ் மற்றும் கிளாடிசின் தங்கை மகள் அவினா (5 வயது) இருவரும் ஆழமான பகுதிக்கு சென்றுள்ளனர்.

திடீரென இருவரும் நீரில் மூழ்கி தத்தளித்தனர்.

இதையடுத்து அவர்களை அருகில் இருந்தவர்கள் மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள் இருவரும் உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக ஆழ்வார்திருநகரி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தனுஷுக்கு வில்லனாக நடிக்கும் பிரபல மலையாள நடிகர்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவர் தனுஷ். இவர் தற்போது 'இட்லி கடை, தேரே இஸ்க் மெய்ன்' ஆகிய படங்களிலும் நடித்து வருகிறார். இதுமட்டுமில்லாமல், 'அமரன்' பட இயக்குனர் ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் தனது 55வது படத்தில் உள்ளார்.

அதனைதொடர்ந்துநடிகர்தனுஷ் 'போர்தொழில்' பட இயக்குனர்விக்னேஷ் ராஜா இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடிக்க உள்ளார். இதில் தனுஷுக்கு ஜோடியாக மமிதா பைஜு நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. இந்த புதிய படத்தை வேல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் தயாரிக்க உள்ளது. இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் ஜூன் மாதம் தொடங்க உள்ளது.

இந்த நிலையில் இந்த புதிய படத்தின் அப்டேட் ஒன்று வெளியாகி உள்ளது. அதாவது, பிரபல மலையாள நடிகரான ஜெயராம் இப்படத்தில் வில்லனாக நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும் நடிகர் அர்ஜுன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது.

# புதிய தோற்றத்தில் அஜித்.. புகைப்படத்தை பகிர்ந்த ஆதிக் ரவிச்சந்திரன்



ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் நடிகர் அஜித் குமார் தனது 63வது படமான 'குட் பேட் அக்லி' படத்தில் நடித்துள்ளார். மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்துக்கு ஜிவி பிரகாஷ் இசையமைத்துள்ளார். இப்படம் வருகிற ஏப்ரல் 10ந் தேதி வெளியாக உள்ளது. இந்த படத்தில் அஜித்துடன் இணைந்து திரிஷா, பிரசன்னா, சுனில், அர்ஜுன் தாஸ், பிரபு உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர்.

சமீபத்தில் இப்படத்தின் டீசர் வெளியாகி சாதனை படைத்தது. அதனைதொடர்ந்துஇரண்டுபாடல்கள்வெளியாகிநல்லவரவேற்பை பெற்று வருகின்றன. இந்த படத்தில் அஜித் மூன்று விதமான கதாபாத்திரங்களில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், அஜித்தின் புதிய புகைப்படம் ஒன்றை இயக்குனர் ஆதிக் ரவிச்சந்திரன் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளார். இந்த புகைப்படம் தற்போது இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது.

# ஜல்லிக்கட்டு போட்டியை கண்டுகளித்த விக்ரம் துஷாரா விஜயன்



சித்தா பட இயக்குனர் எஸ்.யு.அருண்குமார் இயக்கத்தில் விக்ரம் நடித்துள்ள படம் 'வீர தீர சூரன் 2'. இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சராமுடு, துஷாரா விஜயன், சித்திக் ஆகியோர் நடித்துள்ளனர். இந்த படத்தில் நடிகர் விக்ரம் கிராமிய தோற்றத்தில் 'காளி' என்ற கேங்ஸ்டர் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படத்திற்கு ஜி.வி பிரகாஷ் இசையமைத்துள்ளார். இப்படம் மதுரையை கதைக்களமாககொண்டுஉருவாக்கப்பட்டுள்ளது. 'வீர தீர சூரன்' படம் பல தடைகளை தாண்டி வெளியாகி மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இப்படம் முதல் நாளில் மட்டும் ரூ 3.25 கோடிவசூலித்துள்ளது. இப்படம் 2 நாட்களில் ரூ.10 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளது. அடுத்தடுத்து விடுமுறை தினங்கள் என்பதால் இப்படத்தின் வசூல் மேல் அதிகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் படம் ரசிகர்கள் மத்தியில் கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது. இந்த நிலையில், நடிகர் விக்ரம் 'வீர தீர சூரன்' படத்தை விளம்ரப்படுத்தும் பணிகளில் மும்முரம் காட்டி வருகிறார். தமிழ்நாடு முழுக்க பல்வேறு திரையரங்குகளுக்கு சென்ற நடிகர் விக்ரம் ரசிகர்களுடன் படம் பார்த்து வருகிறார். அந்த வரிசையில், தற்போது நடிகர் விக்ரம் மற்றும் துஷாரா விஜயன் திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டியில் நடைபெற்ற ஜல்லிக்கட்டை நேரில் கண்டு ரசித்தனர்.

'வீர தீர சூரன்' படத்தை விளம்பரப்படுத்தும் நிலையில், ஜல்லிக்கட்டு போட்டியை காண வந்த ரசிகர்கள் விக்ரம் மற்றும் துஷாரா விஜயனை பார்த்து மகிழ்ச்சி அடைந்தனர். இது தொடர்பாக புகைப்படம் மற்றும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் அதிகம் பகிரப்படுகிறது.

# 18 ஆண்டு கால ஐ.பி.எல். வரலாற்றில் டெல்லி அணிக்காக 2வது வீரராக மாபெரும் சாதனை படைத்த ஸ்டார்க்



18வதுஐ.பி.எல். தொடரில்விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வரும் லீக் ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் விளையாடி வருகின்றன. இதில் டாஸ் வென்ற சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியின் கேப்டன் கம்மின்ஸ் பேட்டிங் தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த ஐதராபாத் அணி 18.4 ஓவர்களில் 163 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக அனிகேத் வர்மா 74 ரன்கள் அடித்தார். டெல்லி தரப்பில் அபாரமாக பந்து வீசிய மிட்செல் ஸ்டார்க் 5 விக்கெட்டுகள் வீழ்த்தி அசத்தினார்.

இதன் மூலம் 18 ஆண்டு கால ஐ.பி.எல். வரலாற்றில் டெல்லி அணி தரப்பில் 5 விக்கெட்டுகள் கைப்பற்றிய 2வது வீரர் என்ற மாபெரும் சாதனையை மிட்செல் ஸ்டார்க் படைத்துள்ளார். இதற்கு முன்னர் ஐ.பி.எல்.ன் தொடக்க சீசனான 2008ம் ஆண்டு அமித் மிஸ்ரா 5 விக்கெட்டுகள் வீழ்த்தி இருந்தார்.

அத்துடன் நடப்பு ஐ.பி.எல். தொடரில் 5 விக்கெட் கைப்பற்றிய முதல் பந்துவீச்சாளராகவும் சாதனை படைத்துள்ளார்.

இதனையடுத்து 164 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி டெல்லி கேப்பிடல்ஸ் பேட்டிங் செய்து வருகிறது.

# இவரிடமிருந்து நிறைய கற்றுக்கொண்டேன் குல்தீப் யாதவ்



10அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் டெல்லி அணிக்காக இந்திய முன்னணி சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் ஆடி வருகிறார். சமீபத்தில் சாம்பியன்ஸ் டிராபியை வென்ற இந்திய அணியில் இடம் பிடித்திருந்தார்.

இந்திய அணியின் முன்னணி வீரராக திகழும் குல்தீப் யாதவ், ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா அணியில் இருந்த போது சுனில் நரைனிடமிருந்து நிறைய கற்றுக்கொண்டதாக கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில் கூறியதாவது,

ஒரு பந்துவீச்சாளராக நீங்கள் போட்டியில் கண்டிப்பாக ஆதிக்கம் செலுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். ஜஸ்ப்ரித் பும்ரா மற்றும் சுனில் நரைன் போன்ற வீரர்கள் அதனை தொடர்ச்சியாக செய்திருக்கிறார்கள். கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடியபோது, சுனில் நரைனிடமிருந்து நிறைய விஷயங்கள் கற்றுக்கொண்டேன். பந்துவீச்சு லென்த்துக்கு அவர் எப்போதும் முக்கியத்துவம் கொடுக்க வலியுறுத்துவார்.

முன்பெல்லாம், நான் என்னுடைய திறமையை மட்டுமே நம்பி செயல்படுவேன். ஆனால், தற்போது சுனில் நரைன் கூறிய விஷயங்கள் முற்றிலும் சரியானவை என்பதை உணர்கிறேன். நான் என்னுடைய பந்துவீச்சு லென்த்தில் அதிக கவனம் கொடுக்கிறேன். அது எனது பந்துவீச்சில் குறிப்பிடத்தகுந்த மாற்றத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு அவர் கூறினார்

**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 120028528266**
**IFSC code: CNRB0001041**

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.